**O.S. No. 323/2018**

**Deposition of P.W. 1**

**Dated : 31.07.2026**

**Name : பரமசிவம்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

1 முதல் 7,9,10,13,14,17 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வடசேரியில் விஸ்வகர்மா சமுதாய மக்கள் பெரிய கட்சி மற்றும் சிறிய கட்சி என இருப்பிரிவுகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். இரண்டு கட்சிகளும் வடசேரி அக்கசாலை விநாயகர் வழிபாடு செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பெரிய கட்சியினருக்கு தனியாக தலைவர், துணைதலைவர், செயலர், துணைசெயலர் மற்றும் பொருளாளர் என செயல்படுகிறார்கள் என்றால் சரிதான். பெரிய கட்சி நிர்வாகத்தினர் கோவிலுக்காக சொத்து வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த சொத்து பெரிய கட்சி நிர்வாகத்தினர் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல சாமி பெயரில் தான் உள்ளது. கோவிலுக்காக நிர்வாகத்தினர் பெயரில் சொத்து வாங்கப்படும் என்றால் தெரியாது. சின்ன கட்சியினருக்கும் தனியாக நிர்வாகம் செயல்படுகிறது என்றால் சரிதான். சிறிய கட்சியினர் பெயரிலும் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல சாமி பெயரில் வாங்கப்பட்டது. சிறிய கட்சியினர் வாங்கிய சொத்து அவர்களுடைய நிர்வாகத்தினர் பெயரில் தீர்வை ரசீது செலுத்தி வருகிறது என்றால் சரியல்ல சாமி பெயரில் செலுத்தப்படுகிறது. ஆவணங்களில் சாமி வகைக்காக என குறிப்பிட்டு பெரிய கட்சி மற்றும் சிறிய கட்சி என குறிப்பிட்டு தீர்வை ரசீது செலுத்தி வருகிறார்கள் என்றால் சாமி

பெயரில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கட்சியினர் வாங்கிய சொத்தை மற்றொரு கட்சி இடையூறு செய்யக்கூடாது என்றால் சரிதான். மலையாள வருடம் 1094 (1919) ஆம் வருடம் வழக்கு சொத்து பெரிய கட்சி சார்பாக வாங்கப்பட்டது என்றால் தெரியாது சாமி பெயரில் வாங்கப்பட்டது. 1919 ஆண்டு முதல் 07.11.2001 ஆம் ஆண்டு வரை பெரிய கட்சியினர் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் ஆறு உள்ளது என்றால் சரியல்ல மேற்கு திசையில் ஆறு உள்ளது. வழக்கு சொத்து பழையாறு தொட்டு கிழக்கு புறமாக உள்ளது என்றால் சரிதான். அதனால் பெருவெள்ளம் ஏற்படும் பகுதி என்றால் சரியல்ல அதிகம் மழை வந்தால் மட்டும் வெள்ளம் ஏற்படும். அதிகம் மழை வந்தால் பழையாற்றில் வழக்கு சொத்தில் வெள்ளம் தேங்கி நிற்கும் என்றால் சரிதான். சுற்றியுள்ள அனைத்து வயல்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கும். தண்ணீர் வடிவதற்கு 2 மாதங்கள் ஆகும் என்றால் சரியல்ல 2 நாட்களில் வடிந்துவிடும். வழக்கு சொத்து பாலத்திற்கு அருகில் உள்ள இடம் என்பதால் சற்று பள்ளமான பகுதி என்பதால் தண்ணீர் வடிவதற்கு அதிக நாட்கள் ஆகும் என்றால் சரியல்ல இரண்டு நாட்களில் வடிந்துவிடும். வழக்கு சொத்து கடைசியாக அமைந்துள்ளதால் சற்று கூடுதலாக தண்ணீர் தேங்கி நிற்கும் என்றால் சரிதான். வழக்கிற்காக 2 நாட்களில் வடிந்துவிடும் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நெல் பயிரிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். பெருவெள்ளம் ஏற்பட்டதால் வழக்கு சொத்தில் உள்ள பயிருக்கு அதிகமான சேதம் ஏற்பட்டது என்றால் சேதம் ஏற்படும் பெரும் சேதம் இல்லை. வழக்கிற்காக அவ்வாறு சேதம் ஏற்படாது என மறைத்து சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கிழக்கு புறம் வயல் உள்ளது. வழக்கு சொத்தின் தெற்கு திசையில் சாலை உள்ளது. மேல்முறையீட்டு வழக்கு எண் 101/2007 வழக்கானது 24.06.2013 ஆம் தேதி தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்து 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 16 வது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை குறித்து தெரியுமா என்றால் தெரியாது. 16 வது பிரதிவாதியின் மனைவி பெயரில் 8.9.2011 ஆம் தேதி வழக்கு சொத்து தொடர்பாக 40 செண்ட் இடத்தை செட்டில் மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 40 செண்ட் நிலத்தை செட்டில் மெண்டாக கொடுத்ததால் அந்த நபரையும் நான் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் தெரியாது. 16 வது பிரதிவாதியின் மனைவி வழக்கில் அவசிய தரப்பினர் என்றால் தெரியாது. சின்ன கட்சி சார்பாக OA 13/1982 வழக்கில் துணை ஆணையாளர் திருநெல்வேலி முன்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் தாக்கல் செய்யததால் அந்த வழக்கு குறித்து தெளிவு பெற முடியாது என்றால் சரிதான். அந்த மனுவிற்கு எதிராக AP 3/1992 ஆணையாரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது குறித்த ஆவணங்களும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாகர்கோவில் முதன்மை சார் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 133/1982 சம்மந்தமான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 3.8.2004 ஆம் தேதி 16 வது பிரதிவாதியின்

பெயரில் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. கிரையம் வாங்கியுடன் அந்த இடத்தில் எத்தனை நிறுவனங்கள் செயல் படுகிறது என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் தற்போது என்ன உள்ளது என்று தெரியாது. வழக்கு சொத்தில் டெரிக் நிறுவனத்தின் கார் மற்றும் இருசக்கர வாகனத்தின் நிறுவனம் உள்ளது என்றால் தெரியாது. வழக்கிற்காக மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அந்த நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் 5 தள கட்டிடங்கள் உள்ளது அதனை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் கோவிலுக்கு வரி செலுத்தியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)